தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 சூலை 2003

## தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் - கருத்தரங்கு

தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழக நூலகத்தின் சார்பில் தமிழ்நாடு நூலக ஆறாவது மாநாடு-கருத்தரங்கு சூலை 04 முதல் 06 வரை மொழிப்புலக் கருத்தரங்க அறையில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்கவிழாவில் தமிழ்நாடு நூலகச் சங்கத் தலைவர் திரு இரா.முத்துக்குமாரசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். தலைமையுரையாற்றிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் நூலகத்துறை சமூக மாற்றத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் வழிசெய்கிறது என்றும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் நூலக இயக்கம் வளர்வதற்கு வித்திட்டது என்றும் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் உலகப்புகழ் பெற்றதென்றும் நூலகவளர்ச்சிக்குத் தஞ்சை மாவட்டம் பெரும் பங்காற்றியுள்ளது என்றும் கூறினார். சென்னைப் பல்கலைக்கழக நூலகவியல்துறைப் பேராசிரியர் முனைவர் மனோரமா ஸ்ரீநாத் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் சமூகத்தின் படைப்பாற்றலை வளர்க்கக்கூடிய வகையில் சூழ்நிலை அமையவேண்டும் என்றும், நவீன தொழில்நுட்பம் இன்று உலகம் முழுவதும் பரவி வருகிறது என்றும் ஆனால் நூலகங்களில் இதனை வெளிப்படுத்தும் அளவிற்கு வசதிகள் இல்லை என்றும் கூறினார். திருவோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு இராசேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு நூலகச்சங்கச் செயலர் திரு எம்.முத்துசுவாமி அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார். நூலகத்துறையில் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டு நூலகப் பணியாற்றி வருவதைச் சிறப்பிக்கும்பொருட்டு, டாக்டர் எஸ்.ஆர்.ரங்கநாதன் விருது தஞ்சை இளவரசர் திருமிகு சிவாஜி ராஜா போஸ்லே அவர்களுக்கும், மூத்த இளவரசர் மற்றும் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் திரு பாபாஜி ராஜா அவர்களுக்கும், முத்துப்பட்டினம் திரு வித்யா ராஜகோபாலன் அவர்களுக்கும், மேலப்பாதி திரு.வி.க. நூல்நிலையச் செயலர் திரு வி.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், சென்னை எத்திராஜ் கல்லூரி நூலகர் திருமதி பிரமிளா தைமான் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. தமிழகம் முழுவதிலிருந்து சுமார் 100 நூலகர்கள் கலந்து கொண்டனர். அமைப்புச் செயலர் முனைவர் பா.சுந்தரேசன் அவர்கள் நன்றிகூறத் தொடக்கவிழா இனிதே நிறைவுற்றது. இம் மாநாட்டில் 25 ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன. 06-07-2003 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் தமிழ்நாடு நூலகச் சங்கச் செயலர் திரு எம்.முத்துசுவாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும், இலக்கியத்துறைப் பேராசிரியருமான முனைவர் து.சீனிச்சாமி அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். பூண்டி புட்பம் கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் திரு கே.துளசி அய்யா வாண்டையார் அவர்கள் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு இரா.ஜெயக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக அமைப்புச் செயலர் முனைவர் பா.சுந்தரேசன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.






# புத்தர் என்றழைக்கப்படும் சமணர்

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே உள்ள அடஞ்சூர் என்னும் கிராமத்தில் இரண்டு அடி உயரமுள்ள சமணர் சிலை ஒன்று இக்கட்டுரையாளரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. சிவந்திதிடல் அருகே உள்ளே நல்லகூத்த அய்யனார்கோயிலில் இந்த சமண தீர்த்தங்கரர் சிலை உள்ளது. இந்த சமணர் சிலையை அனைவரும் புத்தர் என்றே கூறிவருகின்றனர். அவ்வாறான சமணர் சிலைகளைக் களப்பணியின்போது காரியாங்குடி (தப்ளாம்புலியூர் அருகே, திருவாரூர் வட்டம்), கோட்டைமேடு (ஆலங்குடிப்பட்டி அருகே, புதுக்கோட்டை மாவட்டம்), பெருமத்தூர் (குன்னம் வட்டம்), தஞ்சாவூர் (மூல அனுமார் கோயில் பின்புறம்), செங்கங்காடு (திருத்துறைப்பூண்டி வட்டம்), ஜெயங்கொண்டம் (நகரின் மையப்பகுதி) போன்ற இடங்களில் காணமுடிந்தது.



ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம் மற்றும் ,புதுக்கோட்டை மாவட்டத்தை உள்ளடக்கிய சோழநாட்டில் சமணர் கோயில்கள் தஞ்சாவூர் (கருந்தட்டாங்குடி), கும்பகோணம், மன்னார்குடி ஆகிய இடங்களில் காணப்பட்டாலும், புத்தருக்கு என கோயில்கள் தனியாகஇல்லை. ஆனால் பெருஞ்சேரி,மங்கலம் (தமிழ்நாட்டிலேயே மீசையுடன் காணப்படும் புத்தர் உள்ள இடம்), புத்தமங்கலம் போன்ற இடங்களில் சிறிய மண்டபம் போன்ற அமைப்பில் புத்தரை வைத்து வழிபட்டுவருகின்றனர். பல இடங்களில் சமணர் சிலைகளை புத்தர் சிலைகள் என்றும், புத்தர் சிலைகளை சமணர் சிலைகள் என்றும் கூறிவருகின்றனர். சோழ நாட்டில் சுமார் 60 புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை அமர்ந்த நிலையில் தியான கோலத்தில் உள்ளன. நின்ற நிலையிலுள்ள புத்தர் சிலைகள் மிகவும் குறைவே. கிடந்த நிலையிலுள்ள புத்தர் சிலைகள் சோழநாட்டில் காணப்படவில்லை. சோழநாட்டில் அமர்ந்த நிலையில் தியான கோலத்திலுள்ளபுத்தர் சிலைகள் சில குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்டு அமைந்துள்ளன. தலையில் உஷ்னிஷா எனப்படும் தீச்சுடர், நெற்றியில் திலகக்குறி, மார்பில் புரிநூல், இடையில் ஆடை, உள்ளங்கையில் அசோகச்சக்கரம் போன்றவை அவற்றில் முக்கியமானவையாகும். இவை சமண தீர்த்தங்கரர் சிலைகளில் இருக்க வாய்ப்பில்லை.

இவ்வாறாக சமண தீர்த்தங்கரரை புத்தர் என்று கூறிவருவதைப்போலவே, சில இடங்களில் புத்தரை சமணர் என்றும் அழைத்துவருகிறார்கள். வேதாரண்யத்தில் கற்பகநாதர்குளம் (திருத்துறைப்பூண்டி வட்டம்) என்னுமிடத்திலுள்ள புத்தர் சிலையை சமணர் என்று கூறிவருகின்றனர். அதைப்போலவே பேட்டவாய்த்தலை மத்யார்ஜீனேஸ்வரர் கோயிலின் அருகே இருந்து எடுக்கப்பட்டு, தற்போதுதிருச்சியிலுள்ள அரசு அருங்காட்சியகத்தில் கொண்டுவந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள புத்தரையும் சமணர் என்றே கூறிவந்தனர் என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

-முனைவர் பா.ஜம்புலிங்கம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்

## முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| | ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|---|
| 1. | இரமேஷ்குமார்<br>இலக்கியத்துறை | சங்க இலக்கியத்தில் சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள் - ஓர் ஆய்வு | 07-07-2003 |
| 2. | மோ.கோ.கோவைமணி<br>ஓலைச்சுவடித்துறை | பருவ இதழ்களில் சுவடிப் பதிப்புகள் | 07-07-2003 |
| 3. | ஞா.செல்வகுமார்<br>அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை | தமிழில் அறிவியல் பாடமாக்கம் விலங்கியல் (உயர்நிலைப்பள்ளி) | 09-07-2003 |
| 4. | ச.பிலவேந்திரன்<br>நாட்டுப்புறவியல்துறை | நாட்டுப்புறச் சமயம் பற்றிய தமிழர்தம் கோட்பாடுகள் | 11-07-2003 |
| 5. | சு.இராதாகிருஷ்ணன்<br>சித்தமருத்துவத்துறை | Agrotechnological Studies for Selection of High yileding Geranium | 18-07-2003 |
| 6. | கு.வை.இளங்கோவன்<br>தத்துவமையம் | தத்துவநோக்கில் சைவ வைணவக் கடவுளரின் உருவகங்கள் | 18-07-2003 |
| 7. | திருமதி வே.விஜயா<br>நாட்டுப்புறவியல்துறை | முசுகுந்த வேளாளரின் வாழ்வியல் சடங்குமுறைகள் (பட்டுக்கோட்டை வட்டம்) | 23-07-2003 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

# இந்திய மொழிகள் பள்ளி

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு நிர்வாகச் சீர்திருத்தத்துறையும் இணைந்து 2003 சூலை 10 முதல் சூலை 30 வரை 21 நாட்கள் இந்திய தகுதிகாண்பருவ ஆட்சிப்பணி அலுவலருக்கான சிறப்புத் தமிழ்ப் பயிற்சி வகுப்பினை நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகம், இலக்கணம், மரபுத் தொடர்கள், சொற்கள் உருவாக்குதல், குறிப்பு எடுத்தல், உரையாடல், மொழி பெயர்ப்பு, கட்டுரை, கையெழுத்து எழுதுதல், வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டன. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் திருமதி அர்ச்சனா பட்நாயக், திரு சி.சமயமூர்த்தி, திருமதி கே.சிங்கிதாமஸ் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத் தலைவர் முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா.முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் ஆ.கார்த்திகேயன் (அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை), முனைவர் சா.இராதாகிருட்டிணன் (மொழிபெயர்ப்புத்துறை), முனைவர் எச்.சித்திர புத்திரன் (அகராதியியல் துறை) ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர்.

-முனைவர் வே.சா.அருள்ராஜ்
இந்திய மொழிகள் பள்ளி



# இணையதளம்

தஞ்சைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் அவர்களின் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட ரூ.5.70 இலட்சம் நல்கையினைப் பயன்படுத்தித் தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகக் கட்டடத்தில் இணைய தளம் நிறுவப்பட்டு 09.05.2003 முதல் இயங்கி வருகிறது. இணைய தளத்தினை மே 2003 முதல் நவம்பர் 2003 முடிய பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், பணியாளர்கள் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ள இசைவு வழங்கப்பட்டுள்ளது. 31.07.2003 வரை ஏராளமானோர் இக்கிளை இணைய இணைப்பினைப் பயன்படுத்தியுள்ளனர்.

இணையதளத்தை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளும் இவ்வரிய வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


-பதிவாளர் (பொறுப்பு)

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

திரு. நிர்வாக அலுவலர் அவர்கள்
சரஸ்வதி மஹால் நூலகம்
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

# பேராசிரியர்கள் பணி ஓய்வு



மொழியியல் துறைப் பேராசிரியர் முனைவர் கி.அரங்கன், தொழில் மற்றும் நிலஅறிவியல்துறைப் பேராசிரியர் முனைவர் ஞா.விக்டர் இராசமாணிக்கம், இலக்கியத்துறைப் பேராசிரியர் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் ஆகிய மூவரும் 30-06-2003ஆம் நாள் வயது முதிர்வின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர்.

பேராசிரியர்கள் மூவருக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில், 01-07-2003ஆம் நாள் பிற்பகல் 4 மணியளவில், பேரவைக்கூடத்தில் வாழ்த்தியல் விழா நடைபெற்றது. மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் விழாவில் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் முனைவர் கி.அரங்கன் மற்றும் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் ஆகியோருக்குச் சந்தனமாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, தமிழ்ப் பல்கலைக்கழகச் சின்னம் பொறித்த கலைத்தட்டினை நினைவுப் பரிசாக வழங்கினார். மேலும், சேமநலநிதி மற்றும் சிறப்பு சேமநலநிதி காசோலைகளையும் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

முன்னதாகப் புலத்தலைவர்கள் ஓய்வுபெற்ற பேராசிரியர்களைப் பாராட்டிப் பேசினார்கள். விழாவில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் பணியாளர்கள், மற்றும் மாணவர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர். **



பண்பாய் இதனைப் பேணிக்காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன

முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்